மாதவரம் எஸ். சுதர்சனம் - கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் சிறப்புரை!

# 8வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## டி.சி.வி. மணிகண்டன் அறிக்கை ! தி.மு.தனியரசு - குறிஞ்சி கணேசன் பங்கேற்பு!

சென்னை, செப். 19-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி 8வது வட்டக் கழகச் செயலாளர் டி.சி.வி. மணிகண்டன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 8வது வட்ட தி.மு.க.சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் இன்று (19.9.2024 - வியாழக் கிழமை) மாலை 5 மணி அளவில் ராமசாமி சீதாலட்சுமி மண்டபம், டி.எச். ரோடு, திருவொற்றியூரில் நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் டி.சி.வி.மணிகண்டன் நிகழ்ச்சி ஏற்பாடு செய்துள்ளார்.

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர், 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு தலைமை வகிக்கிறார்.

8வது மாமன்ற உறுப்பினர் வி.ராஜகுமாரி விஜயன்,ஆர்.சி.ஆசை தம்பி ,எம்.வி.குமார்,ஆர்.எஸ்.சம்பத்,இரா.குமரேசன்,கே.பிரபாவதி இரா.முருகேசன், டி.டி.எம்.பாபு,ப.சந்தானகிருஷ்ணன், அ.சுப்பிரமணியன், வி.ஆர்.சீனிவாசன்,மா.கணேசன், ஆர். சின்ன பாப்பா, கே.முகமது அபூபக்கர் சித்தீக்,தீபம் எஸ். ஷங்கர், எஸ். மூர்த்தி, ஜி. முனுசாமி வை.செந்தில் வேலன், தி.மு.சரவணன், மா.வெ.ந. உதயகுமார், சூ. சந்தானம், ஏ.அருளானந்தம், ஜி.செல்வதாஸ், பா. அரங்கநாதன், சுகுந்த முனுசாமி,ஜிம் பரசுராமன்,எம்.எஸ்.தினேஷ் வேலன், மனோஜ் ஆகியோர் வரவேற்கின்றனர் .

கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. டாக்டர்.கலாநிதி வீராச்சாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., குறிஞ்சி எஸ்.கணேசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

ஒய் .நந்திவர்மன் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு 8வது வட்டக் கழகச் செயலாளர் டி.சி.வி. மணிகண்டன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாதவரம் எஸ். சுதர்சனம் - கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் சிறப்புரை!

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதி வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. அறிக்கை!

சென்னை, செப்.19-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் - 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (19.9.2024) கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறுகிறது. அதன் விவரம் வருமாறு:-

இன்று (19.9.2024) மாலை 5 மணிக்கு ராம் சீதாலட்சுமி திருமண மண்டபம் கூட்ட ஏற்பாடு 8வது வட்ட செயலாளர் டி.சி.வி.மணிகண்டன், இன்று (19.9.2024) மாலை 6 மணிக்கு இடம் வன்னியர் திருமண மாளிகை 11வது வார்டுகுறுத்து சி.முனுசாமி,

இன்று (19.9.2024) மாலை 7 மணிக்குஇடம் சக்கீதாபேன்கிட் ஹால்நிகழ்ச்சி ஏற்பாடு க.வீ.சத்தீஷ் குமார்12வது வட்ட செயலாளர் ஆகியோர் செய்துள்ளனர்.

பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

ஆகையால் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் பொது குழு உறுப்பினர்கள் பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகிகள் பாக முகவர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு எம்.சி. தெரிவித்துள்ளார்.

காஞ்சி வடக்கு மாவட்டத்தில் - ஒன்றிய நகர பகுதி பேரூர்

# மாணவர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல்!

## மாவட்டக் கழக அலுவலகத்தில் இன்று காலை நடைபெறுகிறது!

காஞ்சிபுரம், செப்.19-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கான நேர்காணல் ஆலந்தூர் கத்திப்பாராவில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் மாணவர் அணி இணை செயலாளர் பூவை சி.ஜெரால்டு, துணை செயலாளர் சேலம் ரா.தமிழரசன் முன்னிலையில் இன்று காலை முதல் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கை:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டதிற்குட்பட்டஒன்றிய - பகுதி - நகர பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் இன்று (19.9.2024 - வியாழக்கிழமை) காலை 9:00 மணியளவில் காஞ்சிபரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்திர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் ஆலந்துார் ஜோதி திரையரங்கம் அருகையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது. மாநில மாணவர் அணி இணை செயலாளர் அண்ணன் பூவை சி. ஜெரால்டு மற்றும் மாநில மாணவர் அணி துணை செயலாளர் அண்ணன் சேலம் ரா.தமிழரசன் ஆகியோர் ஒன்றிய - பகுதி - நகர பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்பிற்கு விண்ணபத்தவர்களை நேர்காணல் செய்திட வருகை தர உள்ளனர்.

இந்த நேர்காணலில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு மற்றும் துணை அமைப்பாளர்கள் கலாநிதி, விக்கி(எ) விக்னேஸ்வரன், வே.சங்கீதா, எஸ்.ஜெகதீப் மற்றும் தே.ஜெகன் பங்கேற்கின்றனர்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



புழல் 24 வது வட்டத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் தலைமையில் கழகக் கொடி ஏற்றி அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஏ.அஜித் சரவணன் தலைமை! ஆம்.எம்.ரங்கநாதன் முன்னிலை!

# 99வது வட்டத்தில் கழக முப்பெரும் விழா - பவள விழா கழகக் கொடியேற்றல்!

## பகுதிச் செயலாளர் சொ.வேலு எம்.சி. ஏற்றி வைத்து இனிப்பு வழங்கினார்!

சென்னை, செப். 18 -

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்குப் பகுதி, 99 வது வட்டத்தில் கழக முப்பெரும் விழா - பவள விழாவையொட்டி கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

முதல்வர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படியும், அமைச்சர் - சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படியும், எழும்பூர் வடக்கு பகுதி, 99 வது வட்டம், திடீர் நகர் பகுதியில் 1792024 காலை 9 மணி, கழக முப்பெரும் விழா மற்றும் பவள விழாவை முன்னிட்டு கழக கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு நெசவாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஏ. அஜித் சரவணன் தலைமையும், 99 வது வட்ட தி.மு.க. செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் முன்னிலையும் வகித்தனர்.

எழும்பூர் வடக்கு பகுதிச் செயலாளர் சொ. வேலு எம்.சி. கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் புனிதவதி எத்திராசன் எம்.சி, புரசை ஜி.தாமோதரன், டி.செபஸ்டியன் மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அண்ணா நகர் தெற்கு பகுதி

# 105வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் ந.அதியமான் அறிக்கை!

சென்னை, செப். 19-

அண்ணாநகர் 105-வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (19- 09- 2024) மாலை 5.30மணிக்கு , எண் 24, ரசாக் கார்டன் தெருவில் அமைந்துள்ள (ஹோட்டல் செந்தில்) அருகில் வட்ட அவைட்த தலைவர் ஜி.சத்தியகுமார் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், அண்ணா நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் இராமலிங்கம் எம்.சி. ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குகின்றனர்.

எனவே, வட்டக் கழக நிர்வாகிககள் பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி ,வட்ட நிர்வாகிகள், சார்பு மன்ற நிர்வாகிகள் பி.எல்.ஏ.2, மற்றும் அனைத்து பாக உறுப்பினர்கள் தவறாமல் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்து தருமாறு ந.அதிய மான் கேட்டுக்கொள்கிறார்.



சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆணைக்கிணங்க வில்லிவாக்கம் கிழக்கு பகுதி 98(ஆ) வட்டம் சார்பில் 10 இடங்களில் கழக கொடியேற்றி சிற்றுண்டி மற்றும் இனிப்பை சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன் வழங்கினார். உடன் பகுதி செயலாளர் வே.வாசு, வட்டச் செயலாளர் காஞ்சி செ.துரை மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளனர்.

